# 6

# தேவனுடைய குடும்பம்

*“ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாரு மாயிருந்து” (எபே. 2:19).*

உங்களிடத்தில் ஒரு வெற்றுத்தாள் கொடுக்கப்பட்டு, தேவன் மனித குலத்திற்கு அளித்துள்ள மிகவும் திருப்திகரமான பத்து ஆசீர்வாதங்களை அட்டவணைப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப்பட்டால், நீங்கள் எவைகளை அட்டவணைப்படுத்துவீர்கள்? மனித குலத்திற்குத் தேவனு டைய வளம் மிகுந்த மற்றும் மிகவும் உதவி நிறைந்த பயன்கள் என்று எவைகளை நீங்கள் கருதுகின்றீர்கள்?

பெரும்பாலான மக்கள் இந்த அட்டவணையில் குடும்பத்தை முதலாவது அந்த அட்டவணையில் இடுவார்கள் என்று நான் நம்புகின்றேன். ஏதேன் தோட்டத்தில் குடும்பத்தின் தோற்றம் முதல் சமீபத்தில் நடைபெற்ற திருமண வைபவம் வரையிலும் குடும்பத்தின் மூலமாக எண்ணற்ற மகிழ்ச்சிகளும், ஆதரிக்கும் உறவுமுறைகளும் அனுபவிக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மையான மக்கள், தங்களின் சந்தோஷ நினைவுகளில் பெரும்பாலானவை தாங்கள் வளர்ந்த மற்றும்/அல்லது இப்பொழுது வாழ்கின்ற இல்லங்களைச் சுற்றிக் கூடியுள்ளதாகவே கூறுவார்கள். மேலும், ஒரு சிலரைத் தவிர எல்லா மக்களும் வாழ்வதற்குத் தங்களின் மாபெரும் பலத்தையும் உதவியையும் தங்கள் குடும்ப உறுப்பினர்களிடத்திலிருந்தே பெற்றுக் கொண்டதாகக் கூறுவார்கள் என்று நான் நம்புகின்றேன். உண்மையில் குடும்பம் என்பது, நம் ஆவிகளுக்கு வெது வெதுப்பான பரிவிரக்கமுள்ள ஊக்குவித்தலைக் கொடுக்கும்படியாக வடிவமைத்த அன்பான பரலோக பிதாவினால் குடும்பம் மனித குலத்திற்குக் கொடுக்கப்பட்டதாகும்.

குடும்பம் என்பது நமக்கு எவ்வளவு அர்த்தம் நிறைந்ததாக உள்ளது என்ற வெளிச்சத்தில், வேத வசனங்களில் அது (குடும்பம்) புதிய ஏற்பாட்டின் சபையினுடைய இயல்பை நாம் கண்ணோக்குவதற்கு ஒரு உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது பற்றி நாம் வியப்படையக் கூடாது. வேத வசனங் களில் ‘‘குடும்பம்’’ மற்றும் ‘‘வீட்டார்’’ என்ற வார்த்தைகளின் பயன் பாடானது சபையைத் தேவனுடைய குடும்பமாகக் கண்ணோக்கும்படி

*நம்மைக் கட்டாயப்படுத்துகின்றது. நாம் கிறிஸ்தவர்களாகும் பொழுது, நாம் சபை என்ற தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தில் பிறக்கின்றோம் (யோவா. 3:5; எபே. 2:19). இதை இன்னொரு வழியில் கூறுவதென்றால், நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்துவின் சரீரத்திற்குள் பிரவேசிக்கும் பொழுது, தேவன் நம்மைத் தம்முடைய பிள்ளைகளாகச் சுவிகாரப் படுத்திக் கொள்ளுகின்றார் (எபே. 1:5). இந்த சுவிகரித்தலைப் பவுல் முடிவு விளைவாக, கிறிஸ்து இந்த உலகிற்கு வந்ததற்கான முக்கிய மான காரணமாகச் சுட்டிக்காட்டினார்: "நாம் புத்திர சுவிகாரத்தை அடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறின போது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்" (கலா. 4:4, 5).*

## தேவைகள்

*சரீரப்பிரகாரமான குடும்பத்தினால் மட்டுமே சந்திக்கப்படக் கூடிய குறிப்பிட்ட சில நிலைப்பாடுள்ள தேவைகளை எல்லா மனிதர்களும் கொண்டுள்ளனர். இந்தத் தேவைகள் என்னென்ன? முதலாவது, நம் யாவருக்கும் சார்ந்திருக்கும் ஒரு உணர்வு அல்லது "வேர்கள்" தேவைப் படுகின்றது. சரீரப் பிரகாரமான குடும்பமானது சமூகத்தில் நிலைப்புத் தன்மையொன்றை அளிக்கின்றது. இது நமக்கு அதாவது நமக்கு மட்டுமே சொந்தமான தகுதியான ஒரு நிலையை வாழ்க்கையில் இவ்வுலகில் நமக்கு அளிக்கின்றது.*

*இரண்டாவது, நமக்கு பாதுகாப்பின் உணர்வொன்று தேவை, நாம் எப்பொழுதாவது மனரீதியாக, சமூக ரீதியாக அல்லது சரீரப்பிரகாரமாக உதவியற்றுப் போனால் நம்மேல் அக்கறை கொள்ளும் ஒரு சமூகத்தின் பாகமாய் நாம் இருக்கின்றோம் என்ற உறுதிப்பாடு நமக்குத் தேவை. சரீரப் பிரகாரமான குடும்பமானது நமக்கு இந்தப் பாதுகாப்பை அளிக்கின்றது. அது வாழ்வின் புயல்களில் இருந்து பாதுகாப்பிடம் ஒன்றை நமக்கு அளிக்கின்றது. நாம் குழந்தைகளாய் இருந்த பொழுது, நாம் நம்மையே பராமரித்துக் கொள்ள முடியாதிருந்த பொழுது அது நமக்குத் தேவையான வற்றை நமக்கு அளித்தது. நாம் வியாதிப்படும் பொழுது, அல்லது ஆவியில் முறிந்த பொழுது நமக்குத் தேவையானவற்றை அது நமக்கு அளிக்கின்றது, மற்றும் அது நாம் வயதாகி, ஆற்றல் குறைந்து, நமது இரண்டாம் குழந்தைப் பருவத்தில் வாழ்கின்ற போதும் நமக்குத் தேவையானவற்றை அளிக்கும். அது நமது அடைக்கலமாக, புகலிடமாக, ஆதரவின் பாறையாக இருக்கின்றது.*

*மூன்றாவது, நம்மை அடையாளப்படுத்தும் உணர்வொன்று தேவை. நாம் யார், நாம் என்னவாக இருக்கின்றோம் என்று அறிய விரும்பும் உள்ளார்ந்த தவிப்பொன்று நம்மிடம் உள்ளது. இந்த ஆழ்ந்த விருப்பத்திற்கு நமது சரீரப்பிரகாரமான குடும்பமானது ஓரளவிற்குப் பதில் அளிக்கின்றது.*

*நான்காவது, நம்மை ஏற்றுக்கொள்ளும் உணர்வொன்று நமக்கு தேவை,*

*நாம் நாமாக, ஒப்பனை மற்றும் முகமூடி ஆகியவற்றிலிருந்து விடுபட்டவர்களாய் இருக்க முடியும் என்று அறிதலின் பாதுகாப்பு நமக்குத் தேவை. சரீரப்பிரகாரமான குடும்பமானது நாம் எப்படியிருக்கப் போகிறோம் என்பதற்காகவோ அல்லது நாம் எப்படியிருந்தோம் என்பதற்காகவோ அல்ல ஆனால் நாம் எப்படி இருக்கிறோம் என்பதற்காக நம்மை நேசிக்கின்றது. நமது சரீரப்பிரகாரமான குடும்பங்களில் நாம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு எதையும் சாதிக்க வேண்டியதில்லை. நாம் மிகச் சிறந்தவர்களாய் அல்லது மிகச் சிறந்தவற்றைச் செய்பவர்களாய் இருக்க முடியாதிருந்தாலும் நாம் அப்பொழுதும் அன்பு காட்டப்படுகின்றோம் மற்றும் அப்பொழுதும் நமது உறவினர்கள் மத்தியில் இடம் பெற்றுள்ளோம். நாம் பெறுகின்ற அன்பை நாம் ஈட்ட வேண்டியதில்லை; அது எவ்விதப் பிணைப்புகளும் அல்லது நிபந்தனைகளும் இன்றித் தரப்படுகின்றது.*

---

*புதிய ஏற்பாட்டின் சபையில்*
*ஒரு கிறிஸ்தவர் ஆவிக்குரிய சார்புணர்வு*
*ஒன்றை அனுபவிக்கின்றார்.*

---

*மனிதர்களுக்கு சரீரப்பிரகாரமான குடும்பத்தால் திருப்தியளிக்கப்படக் கூடிய உணர்வுப் பூர்வமான, சமூக மற்றும் சரீரப்பிரகாரமான தேவைகளுக்கு இணையான ஆவிக்குரிய தேவைகளும் உள்ளன. சில மனிதர்கள் இந்த ஆவிக்குரிய தேவைகளைத் தங்களுக்குள்ளேயே உணருகின்றனர், மற்றவர்கள் இவைகளை உணருவதில்லை. நாம் அதை உணர்ந்தாலும் உணராவிட்டாலும் அவைகள் உண்மையானவைகளாய் இருக்கின்றன, மற்றும் இவ்வுலகில் நாம் உண்மையான மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு அவைகள் சந்திக்கப்பட வேண்டும். மனித ஆளுமைத் தன்மையும் ஆவியும் ஆவிக்குரிய ஒரு அளவீட்டைக் கொண்டுள்ளன. இந்தப் பண்புகள் காணாமல் விடப்படும் பொழுது அல்லது புறக்கணிக்கப்படும் பொழுது, நாம் ஒரு வகையான சமூக மற்றும் சரீரப் பிரகாரமான சந்தோஷத்தை மகிழ்வுடன் அனுபவித்தாலும், தேவன் நமக்கென்று விருப்பத்துடன் வைத்துள்ள ஆவிக்குரிய சந்தோஷத்தையும் நிறைவையும் நாம் மகிழ்வுடன் அனுபவிக்க முடியாது.*

*ஒரு சிறு அறையில் உள்ள சிலந்தி வலைகளை மட்டும் நீக்கிப் போடுவதினால் நான் அந்த அறையை சுத்தம் செய்ய நாடினால் எப்படியிருக்கும்? நான் இன்னும் மற்ற சிலந்தி வலைகளையும் அடிக்கடி சுத்தம் செய்பவனாக என்னையே காண மாட்டேனா? ஒரு சிலந்தி வலையைப் பின்னுகின்றது, மற்றும் அந்தச் சிலந்தி என் அறையில் இருக்கும் வரையில் தொடர்ந்து அது வலையைப் பின்னிக் கொண்டேயிருக்கும்.*

*குளியலறை முழுவதிலும் தண்ணீர் வழிந்தோடுவதை நான் கண்டால் எப்படியிருக்கும்? வெறுமனே நான் அதைத் துடைத்துக் கொண்டு மட்டுமே இருந்தால், தண்ணீரை நீக்கிப் போடுவதில் நான் எவ்வளவு வெற்றி*

யடைவேன்? தண்ணீர் ஏதேனும் ஒரு ஆதார மூலத்தில் இருந்து வருவதாயிருக்கும், அந்த ஆதார மூலம் கண்டு பிடித்து, நீக்கப்படும் வரைக்கும் குளியலறைத் தரையில் இருந்து நான் தொடர்ச்சியாகத் தண்ணீரைத் துடைத்துக் கொண்டேயிருப்பேன்.

ஒவ்வொரு மனிதருக்கும் பொதுவான ஆவிக்குரிய தேவைகள் போய் விடுவதில்லை. அவைகள் இல்லையென்பது போன்ற நமது நடிப்பினால் அவை தணிக்கப்படுவதில்லை. நமக்கு சாதாரணமான சரீர சந்தோஷத்தையும் ஆவிக்குரிய மகிழ்ச்சியையும் அனுபவிப்பதற்கு இந்த சரீரப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய தேவைகள் சந்திக்கப்பட வேண்டும்.

## சந்திக்கப்பட்ட தேவைகள்

நாம் யாவரும் கொண்டுள்ள ஆவிக்குரிய தேவைகள் இன்னொரு குடும்ப அலகான தேவனுடைய குடும்பத்தால் திருப்திப் படுத்தப் படுகின்றன. தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தில் தேவன் தகப்பனாக இருக்கின்றார் (1 யோவா. 3:1), கிறிஸ்தவர்கள் சகோதர சகோதரிகளாய் இருக்கின்றனர் (1 யோவா. 5:1), மற்றும் இயேசு மூத்த சகோதரராய் இருக்கின்றார் (ரோமர் 8:17). பரலோகத்திற்குரிய இந்தக் குடும்பத்தை "சபை" என்று பவுல் குறிப்பிட்டார். அவர் தீமோத்தேயுவுக்கு, "நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன். தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படிக்கு இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" (1 தீமோ. 3:14, 15) என்று கூறினார்.

புதிய ஏற்பாட்டின் சபையில் ஒரு கிறிஸ்தவர் ஆவிக்குரிய சார்புத் தன்மையின் உணர்வொன்றை அனுபவிக்கின்றார். அவர் ஜெபிப்பதற்கும், உடன் நடப்பதற்கும் மற்றும் வாழ்வதற்கும் ஒரு பரலோக பிதாவைப் பெற்றுள்ளார். அவர் ஒருவரின் மூலமாய் ஜெபிப்பதற்கும், அவரிடமிருந்து கற்றுக் கொள்வதற்கும் அவர்மீது சாய்ந்துகொள்வதற்கும் மூத்த சகோதரர் ஒருவரைப் பெற்றுள்ளார். ஒருவரையொருவர் சகோதர சகோதரிகளாய் அன்புகூருகின்ற மற்றும் தேவனு டைய மகிமைக்கென்று ஒரு நிறுவனமாக இன்றி ஆவிக்குரிய ஒரு குடும்பமாக ஒன்றுகூடி ஊழியம் செய்யும் விசுவாசிகளின் சமூகத்தில் ஒரு பாகமாக அவர் வாழ்கின்றார்.

தேவனுடைய குடும்பத்தில் நாம் ஆவிக்குரிய பாதுகாப்பு உணர்வொன்றைப் பெறுகின்றோம். நமது பரலோக பிதா நம்மில் அன்புகூருகின்றார் மற்றும் நமக்குத் தேவையானவற்றை அளிப்பார் என்று நாம் அறிகின்றோம். அவர் நமது சரீரப் பிரகாரமான தேவைகளுக்கானவைகளைக் கூட அளிக்கின்றார். இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் கவலைப் படாதிருக்கும்படி போதிக்கையில், நம்முடைய பிதா நமது தேவைகளை அறிகிறார் மற்றும் அவர் நம் மீது அக்கறை கொள்வார் என்பதை நாம் நினைவில் கொள்ளும்படி வற்புறுத்தினார்: "ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று

கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார்" (மத். 6:31, 32). அது போலவே, நமது பிதா நமது ஆவிக்குரிய தேவைகளுக்கானவைகளையும் அளிக்கின்றார். யூதா தமது நிருபத்தை முடிக்கையில் பயன்படுத்தும் போதனையில் தேவனை, "வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர்" (யூதா 24) என்று குறிப்பிடுவதினால் பரலோகத்தின் இந்த அக்கறையைப் பற்றி நமக்கு நினைவூட்டினார்.

ஆவிக்குரிய அடையாளப் படுத்துதலின் உணர்வுக்கான நமது தேவையும் கூட தேவனுடைய குடும்பத்தில், சபையில் சந்திக்கப் படுகின்றது. மனமாற்றத்திற்கு முன்பு நாம் நோக்கம் அல்லது இலக்கின்றி அலைந்து திரிந்தோம், ஆனால் தேவனுடைய குடும்பத்தில் பிறந்ததன் மூலமாக, நாம் தேவனுடைய சொந்த உடைமையாகினோம். இந்த மாற்றத்தைப் பற்றிப் பேதுரு பின்வருமாறு எழுதினார்:

> நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களா யிருக்கிறீர்கள் (1 பேது. 2:9, 10).

தேவனுடைய குடும்பத்தைப் பவுல் தேவனுடைய சுதந்திரம் என்று கூடக் குறிப்பிட்டார் (எபே. 1:18). தேவனுடைய குடும்பத்தார் என்ற வகையில் கிறிஸ்தவர்கள் - பரலோகம் என்ற - நித்திய சுதந்தரம் ஒன்றைக் கொண்டுள்ளனர்; தேவனும் கூட ஒரு சுதந்தரத்தைக் கொண்டுள்ளார்: அது கிறிஸ்தவர்கள்!

அது போலவே தேவனுடைய குடும்பமானது நமக்கு ஆவிக்குரிய ஏற்றுக் கொள்ளுதலின் உணர்வு ஒன்றையும் அளிக்கின்றது. நாம் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தினால் தேவனிடத்தில் வந்து, அவருக்கு முன்பாக நம்பிக்கையிலும் உண்மையான கீழ்ப்படிதலிலும் வாழ்கையில் நாம் அவருடைய பிள்ளைகள் என்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றோம். அவர் தம்முடைய விசேஷித்த அன்பை நம் மீது பொழிந்து, "அப்பா! பிதாவே!" (கலா. 4:6) என்று கூப்பிடும் தம்முடைய ஆவியை நம்முடைய இருதயங்களில் வைக்கின்றார். கிறிஸ்துவுக்குள் நாம் "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை" (ரோமர் 8:1) என்று பவுலுடன் இணைந்து கூற முடியும். இது, மனந்திரும்புதலும் வளர்ச்சியும் இனி எதிர்பார்க்கப்படுவதில்லை என்று அர்த்தப்படுவதில்லை;

இது, அவர் நம்மை இருக்கும் இடத்திலேயே ஏற்றுக் கொள்கின்றார் என்றும் நாம் எப்படியாக வேண்டும் என்பதில் அவர் நம்மை மென்மையாக நடத்துகின்றார் என்றும் அர்த்தப்படுகின்றது. "நாம் இருக்கும் நிலையில் நம்மை அவர் அன்புகூருகின்றார், ஆனால் நாம் இருக்கும் அதே நிலையை விட்டு வருவதற்கு நம்மை அவர் மிகவும் அதிகமாய் அன்புகூருகின்றார்" என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.

அநேக ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தில் உள்ள இலண்டனில் நான் ஒரு திருமணமான இளம் பெண்மணியைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்த முயற்சி செய்ததை நினைவு கூருகின்றேன். அப்பெண்மணி ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த ஒரு அழகிய இளம் தாயாக இருந்தார்கள். திருமணமாகி சில மாதங்களுக்குப் பிறகு, அப்பெண்மணியின் கணவர் அவளை விட்டுப் பிரிந்து சென்று விட்டார், அப்பெண்மணி தானே தனது பிள்ளையை வளர்க்க முயற்சி செய்தார். அப்பெண்மணி ஒரு குழந்தை யாயிருந்த பொழுது அவளது இல்வாழ்வுகூட அதிகமாய் இருந்ததில்லை என்பது உறுதியாய்த் தெரிந்தது. எங்களது உரையாடலில் நான் அவளிடத் தில், "கிறிஸ்துவின் மூலமாக நீங்கள் இரட்சிக்கப்பட முடியும், மற்றும் ஒரு அழகிய இல்லத்தைப் பெறவும் முடியும்'' என்று கூறினேன். எனது குறிப்புரையானது அவளை ஊக்கப்படுத்தவே இல்லை. நான் ஏனென்று வியந்தேன், பிறகுதான் நான், இந்த இளம் பெண்ணுக்கு அழகிய இல்லம் என்றால் என்ன என்ற கருத்தே கிடையாது என்பதை உணர்ந்தேன். அவள் இல்லத்தை வசீகரமுடையதாகவோ அல்லது மகிழ்ச்சியானதாகவோ ஒருக்காலும் கண்டதில்லை. இல்லம் என்பது ஆதரித்து, பலப்படுத்தி அன்பு செய்யும் இடம் என்பதைத் தவிர வேறு எல்லா உருவகமும் அவளது சிந்தையில் அவளது அனுபவத்தினால் உண்டாக்கப்பட்டிருந்தது; இல்லம் அழகானது என்று கற்பனை செய்வது அவளுக்குக் கடினமாய் இருந்தது. இருப்பினும் உறுப்பினர்களின் சாதாரணமான சரீரப்பிரகாரமான, உணர்வுப்பூர்வமான மற்றும் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்கும் ஒரு இல்லத்தைக் கண்டுள்ள எவரும் கிறிஸ்துவால் அந்த இல்லம் ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டு, வழி நடத்தப்பட்டு இருக்கையில் எவ்வளவு அழகானதாக இருக்க முடியும் என்பதை அந்த உறுப்பினர்கள் அறிகின்றனர்.

இந்த இளம் பெண்ணைப் போலவே, சபையானது நமது ஆவிக்குரிய தேவைகளை எவ்விதம் சந்திக்கின்றது என்பதைப் பல மக்கள் காண முடிவதில்லை. அவர்கள் புதிய ஏற்பாட்டின் உண்மையான சபையினால் சுற்றிச் சூழப்பட்டிருப்பதில்லை. அவர்கள் சபையைத் தேவனுடைய ஆவிக்குரிய குடும்பமாகக் கண்டிருப்பதில்லை. ஆகையால், அவர்கள் கிறிஸ்துவின் சபையில் இருந்து பிரிந்து வாழ்கையில் தாங்கள் தவற விடுவதென்ன என்பதைச் சிந்தித்துப் பார்ப்பது அவர்களுக்குக் கடினமாக உள்ளது. இந்த சூழ்நிலையில் சபை என்னவாக உள்ளது என்பதையும் தேவனுடைய குடும்பம் என்ற வகையில் சபையானது நமது வாழ்வின் ஆவிக்குரிய அளவீடுகளுக்குப் பதில் அளிக்கின்றது என்பது எவ்வளவு உண்மையாய் உள்ளது என்பதை நினைவு படுத்திக் கொண்டிருப்பது கிறிஸ்தவர்களின் கடமையாக உள்ளது.

தேவனுடைய குடும்பத்தின் மூலமாக மட்டுமே நாம் நமது மிக உள்ளான மனிதன் பெற ஏங்குகின்ற சமாதானம், பாதுகாப்பு, நோக்கம் மற்றும் அடையாளம் ஆகியவற்றைக் காண முடியும். சபை என்ற இந்தக் குடும்பத்திற்கு வெளியே உண்மையான சந்தோஷம் நம்முடையதாயிருக்க முடியாது.

## அழகிய முறையில் சந்திக்கப்பட்ட தேவைகள்

சபையைத் தேவனுடைய குடும்பமாகக் கண்ணோக்குவதற்கு, எருசலேம் சபையைப் பற்றி லூக்காவின் பொதுக் குறிப்பை நாம் ஆழ்ந்த சிந்தனை செய்வோம். அவரது சித்தரிப்பானது ஆதிக் கிறிஸ்தவர்களின் அன்றாட வாழ்வில் தேவனுடைய குடும்பத்தின் அழகிய பண்புகளைக் காண்பிக்கின்றன:

> *அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந் நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.*
>
> *... விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப். 2:42-47).*

ஒவ்வொரு கிறிஸ்தவரும் சார்ந்திருக்கும் உணர்வொன்றைக் கொண்டிருந்தனர், ஏனெனில் "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்" (அப். 2:44). ஒவ்வொரு உறுப்பினரும் அடையாளம் பெற்றிருந்தனர், ஏனெனில் எவரொருவரும் மற்றவருக்கு மேலாக மதிக்கப்படவில்லை, மற்றும் சபை முழுவதும் அதில் உள்ள எந்தவொரு உறுப்பினருடைய துன்பங்களிலும் அவருடைய தேவைகளுக்குப் பதில் அளித்தது. ஒவ்வொருவரும் (தாங்கள்) ஏற்றுக் கொள்ளப்படுதலை மகிழ்வுடன் அனுபவித்தனர். நாள்தோறும் மக்கள் கர்த்தருடைய சரீரத்தில் சேர்க்கப்பட்டனர் மற்றும் அவர்கள் சபையாரால் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். ஒவ்வொரு உறுப்பினரும் சமுதாய மாதிரி வாழ்வினால் மட்டுமே அளிக்கப்படக் கூடிய பாதுகாப்பு ஒன்றை மகிழ்வுடன் அநுபவித்தனர். அவர்கள் தங்களின் "காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்."

தேவனுடைய குடும்பத்தின் இந்த சபையார் ஜெபம், துதி, போதனை,

ஐக்கியம் மற்றும் கர்த்தருடைய பந்தியை ஆசரித்தல் ஆகியவற்றுடன் முறைப்படியான ஆராதனையில் ஈடுபட்டிருந்தனர் (அப். 2:42). அவர்கள் தங்கள் பரலோக பிதாவை வணங்கி, தங்கள் மூத்த சகோதரரான இயேசு கிறிஸ்துவின் மூலம் வந்த கிருபையின் கொடைகளை அறிந்துணர்ந்து, இருதயத்தில் மகிழ்ச்சி மற்றும் உண்மையுடன் வாழ்ந்தனர். அவர்கள் சபையின் சமுதாய வாழ்வின் பாதுகாப்பையும், இந்த வாழ்வில் உபகார அக்கறையையும், இனிவரும் உலகில் இயேசுவின் மூலம் நித்திய ஜீவனுக்கான உறுதிப்பாட்டையும் மகிழ்வுடன் அனுபவித்தனர்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு சிறு சபைக்கு நான் ஒரு வாரத்திற்குப் பிரசங்கித்துக் கொண்டிருந்த வேளையில் ஊர்ந்து செல்லும் ஒரு சிறிய வீடானது சபைக் கட்டிடத்திற்கு அடுத்து நகர்த்தப்பட்டிருந்ததை நான் கவனித்தேன். அது அவர்கள் அவ்விடத்தில் வைத்த கூடுதல் வகுப்பறையாய் இருக்கும் என்று நான் கற்பனை செய்து கொண்டேன். ஒரு உறுப்பினரிடத்தில் நான், “உங்களின் ஊர்ந்து செல்லும் அறை எதற்காக உள்ளது?” என்று கேட்டேன். அந்த உறுப்பினர் ஒரு புன்சிரிப்புடன் “அது எங்களுடைய விதவைக்காக உள்ளது” என்று விளக்கம் அளித்தார். மேலும், அவர் “இந்த சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர் ஒருவர் தம் மனைவியைத் தனிமையில் விட்டு சமீபத்தில் இறந்து போனார். அந்தப் பெண்மணி தமது தேவைகளைச் சந்திப்பதிலும் தாம் மேற்கொள்ள வேண்டிய முடிவுகளை ஏற்படுத்துவதிலும் சிரமங்கள் கொண்டிருந்தார். எனவே நாங்கள் இந்தச் சிறிய ஊர்ந்து செல்லும் வீட்டை சபைக் கட்டிடத்திற்கு அருகில் நகர்த்திக் கொண்டுவந்தோம். அந்தப் பெண்மணி பாதுகாப்பும் மற்றும் தனக்குத் தேவைகளில் உதவியும் பெற்றுக் கொள்ளும்படி அவர்களை இதில் வாழ அனுமதித்தோம். அந்தப் பெண்மணி ஏதாவது வழிகளில் ஊழியம் செய்யாது இதில் வாழ விரும்பவில்லை, எனவே நாங்கள் இக்கட்டிடத்திற்குத் தேவைப்படுகின்ற வாயிற் காவல் பொறுப்புப் பணியை அப்பெண்மணியினிடத்தில் ஒப்படைத்தோம்’’ என்று கூறினார். உறுப்பினரால் தரப்பட்ட இந்த விளக்கத்தைக் கவனிக்கையில், நான் “இது தேவனுடைய குடும்பத்தைப் பண்புபடுத்தவேண்டிய அழகு நிறைந்த கவனிப்பும் அக்கறையும் ஆகும்’’ என்று நினைத்தேன்.

## முடிவுரை

நீங்கள் தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினராய் இருக்க விரும்பவில்லையா? தேவனுடைய குடும்பமாகிய சபைக்குள் நீங்கள் பிரவேசிக்காத வரையிலும் உங்கள் வாழ்வு நிறைவடைய முடியாது என்பதை நீங்கள் உணருகின்றீர்களா? அவருடைய குடும்பத்திற்குப் புறம்பே, நீங்கள் அவரது குடும்ப உறுப்பினர்த்துவம் மட்டுமே தரக்கூடிய ஆவிக்குரிய நிலைப்புத் தன்மை, பாதுகாப்பு, ஏற்புடையமை மற்றும் அடையாளம் ஆகியவற்றை தவற விடுவீர்கள்/அடையாமல் இருப்பீர்கள்.

ஒவ்வொரு பிள்ளையும் ஒரு அனாதை என்ற எண்ணம் வருகையில் திகிலுற்று நடுங்குகின்றது, மற்றும் வயது முதிர்ந்த ஒவ்வொருவரின்

இருதயமும் அவர் அனாதை ஒருவரைக் காண்கையில் கதறுகின்றது. எவரொருவரும் ஒரு அனாதையாய் இருக்க விரும்புவதில்லை மற்றும் எவரொருவரும் அனாதையைக் காண விரும்புவதில்லை. வாழ்வின் கொடூர மான சூழ்நிலைகள் அல்லது மனித அநீதிகள் ஆகியவற்றினால் குழந்தைகள் கைவிடப்படுதலை நாம் முற்றிலுமாகத் தடை செய்து விட முடியாது; அனாதைகளை அன்புடனும், பரிவுடனும், உதவியுடனும் அணுகுதலை மட்டுமே நாம் செய்ய முடியும். என்றாலும், ஒருவரும் ஆவிக்குரிய அநாதையாய் இருக்க அவசியமில்லை. சுவிசேஷத்தின் மூலமாக எவரொரு வரும் தேவனுடைய குடும்பத்தில் வந்து சேர முடியும், அவருடைய பிள்ளையாக சுவிகரிக்கப்பட முடியும், மற்றும் மற்ற எல்லாப் பிள்ளைகளும் பெறுகின்ற அன்பையும் மகனுக்குரிய தன்மையையும் பெற முடியும்.

நாம் ஆவிக்குரிய பிறப்பினால் தேவனுடைய குடும்பத்தினுள் பிரவேசிக்கின்றோம். இயேசு, "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவா. 3:5) என்று கூறினார். நாம் கிறிஸ்துவை விசுவாசிக்க (யோவா. 8:24) பாவத்திலிருந்து மனந்திரும்ப (அப். 17:30) இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கையிட (ரோமர் 10:10) மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற (1 கொரி. 12:13) தேவனுடைய வசனத்தின் மூலமாக ஆவியானவரால் வழி நடத்தப்படுகின்றோம். பேதுரு, "அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" (1 பேது. 1:23) என்று கூறினார்.

தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்தவர்களைத் தேவன் பிள்ளை களாக ஏற்றுக் கொள்கின்றார். அவர் தம்முடைய ஆவியையும் (கலா. 4:6), தம்முடைய குடும்பத்தின் ஆசீர்வாதங்களையும் (எபே. 1:3) மற்றும் நித்திய சுதந்தரம் ஒன்றையும் (எபே. 1:11) அவர்களுக்குக் கொடுக்கின்றார். இதன் விளைவாக தேவனுடைய பிள்ளைகள் சார்புணர்வு, பாதுகாப்பு, ஏற்புடைமை மற்றும் அடையாளப்படுத்துதல் ஆகிய உணர்வுடன் வாழ்கின்றார்.

நீங்கள் தேவனுடைய பிள்ளையாய் இருக்கின்றீர்களா?

## படிப்பு மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. இல்லத்தின் மூலமாக நீங்கள் அனுபவித்துக் கொண்டுள்ள மகிழ்ச்சிகளை அட்டவணைப்படுத்தவும்.
2. தேவனுடைய குடும்பத்திற்குள் ஒருவர் எவ்வித பிரவேசிக்கின்றார்?
3. தேவன் நம்மை எப்பொழுது தம்முடைய பிள்ளைகளாகச்

*சுவிகரித்துக் கொள்ளுகின்றார்?*

4. *ஒவ்வொரு நபரும் கொண்டுள்ள நிலையான தேவைகளை அட்டவணைப்படுத்தி, இந்தத் தேவைகளைக் குடும்பம் எவ்விதம் சந்திக்கின்றது என்று விவரிக்கவும்?*
5. *நமது ஆவிக்குரிய தேவைகளை மனிதரின் நிலையான தேவைகளுடன் ஒப்பிடவும்.*
6. *கிறிஸ்தவர் அங்கம் வகிக்கும் ஆவிக்குரிய குடும்பத்தை விவரிக்கவும்.*
7. *தேவனுடைய குடும்பமானது நமக்கு ஆவிக்குரிய பாதுகாப்பை எவ்விதம் தருகின்றது?*
8. *தேவனுடைய குடும்பமானது நமக்கு ஆவிக்குரிய ஒரு சார்புணர்வை எவ்விதம் தருகின்றது?*
9. *தேவனுடைய குடும்பமானது நமக்கு ஆவிக்குரிய ஒரு அடையாளப்படுத்துதலை எவ்விதம் தருகின்றது?*
10. *தேவனுடைய குடும்பமானது நமக்கு ஆவிக்குரிய ஒரு ஏற்புடைமையின் உணர்வை எவ்விதம் தருகின்றது?*
11. *நமது ஆவிக்குரிய தேவைகளை சபை எவ்விதம் சந்திக்கின்றது என்பதற்கு ஒரு விளக்கமாக எருசலேம் சபையைப் பயன்படுத்தவும்.*
12. *தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தில் ஒருவர் பிரவேசிக்கும் வரை அவர் நிறைவானவராய் இருக்க முடியுமா?*
13. *தேவனுடைய குடும்பத்திற்குப் புறம்பே உள்ளவர் ஒரு அனாதையைப் போல் இருக்கின்றாரா?*
14. *தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தில் நீங்கள் விசேஷமாய் மகிழ்வுடன் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களை அட்டவணைப் படுத்தவும்.*